ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1826/23 - 2013 සැප්තැම්බර් මස 04 වැනි බදාදා - 2013.09.04

*1826/23 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாணத்தின் முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் வியாபார அலுவல்கள் தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், கீழ் அட்டவணையில் விபரிக்கப்படுகின்ற மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க முன்பள்ளி நியதிச் சட்டம் 2013.02.05 ஆந் திகதி மேல் மாகாண சபை மூலம் சபை நிறைவேற்றத்தின் பின் அது தொடர்பாக 2013. 07.04 ஆந் திகதி மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரின் அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பிரசன்ன ரணதுங்க,*
*முதலமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல்,*
*சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி*
*உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி,*
*மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு*
*மற்றும் வியாபார அலுவல்கள் தொடர்பான அமைச்சர்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*மேல் மாகாண முதலமைச்சு,*
*சிராவஸ்தி மந்திர,*
*ஸ்ரீமத் மாகஸ் பெர்னாந்து மாவத்தை,*
*கொழும்பு 07,*
*2013, ஓகத்து 13.*

**மேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க முன்பள்ளி நியதிச் சட்டம்**

*மேல் மாகாணத்தினுள் முன்பள்ளி பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், நிர்வாகம் செய்தல் மற்றும் இயக்குதல் சம்பந்தமாக முன்மாதிரி முன்பள்ளிகளை அறிமுகம் செய்து வைப்பது சம்பந்தமாகவும் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான காரணம் சம்பந்தமாக தொடர்பான ஏற்பாடு, திட்டமிடல் தொடர்பாக 2003 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முன்பள்ளி நியதிச் சட்டம் வலுவிழக்கச் செய்தல் தொடர்பான நியதிச் சட்டமாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபை மூலம் இவ்வாறு இயற்றப்படும்.* *இயற்றப்படுதல்.*

*1. இந்நியதிச் சட்டம் மேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க முன்பள்ளி பாடசாலையில் நியதிச் சட்டம் என்றவாறு அறிமுகப்படுத்துகின்ற போதிலும் மேல் மாகாண சபை ஆளுநரின் அனுமதி பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.* *சுருக்கப் பெயரும் நடைமுறைப் படுத்தப்படும் திகதியும்.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*பகுதி I*

**நோக்கம்**

நோக்கம்.

2. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கம் பின்வருமாறு ஆகும்.

(1) மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்திச் செல்கின்ற எல்லா முன்பள்ளிகளும் பதிவு செய்தல், இயக்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(2) மாகாணத்தின் முன்பள்ளி சேவையில் ஈடுபடுகின்ற எல்லா ஆசிரியர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்தல்.

(3) மாகாணத்தின் முன்பள்ளி கல்வி சம்பந்தமாக கொள்கைத் தீர்மானம் எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(4) முன்பள்ளி சம்பந்தமாக தரப்படுத்தலை குறித்தொதுக்குதல்.

(5) முன்பள்ளி கல்வி தொடர்பாக முன்பள்ளி பிள்ளைகளின் பெற்றோரையும், பொதுமக்களையும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல்.

(6) மாகாணத்தின் முன்பள்ளி மற்றும் தொடர்புடைய செயல்களில் ஈடுபடுகின்ற அரசாங்க மற்றும் அரச சார்பற்ற மற்றும் தனியார் பிரிவில் நிறுவனங்களின் நடவடிக்கைகளை தொடர்புபடுத்தச் செய்தல் மற்றும் மாகாண நியதிச்சட்டத்திற்கு ஏற்புடையதாக அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல் மற்றும் தொடர்பு நடவடிக்கைகளை நடாத்திச் செல்லல்.

(7) மாகாணத்தின் முன்பள்ளியினுள் ஆரம்பப் பிள்ளைப்பருவ குழந்தைகளின் மொத்த அபிவிருத்தி இலக்கை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கை மூலம் அவர்களின் திறனை அபிவிருத்தி செய்வதுடன் முறையான கல்விக்கு ஆக்கபூர்வமான அடித்தளத்தை உருவாக்கிக் கொடுத்தல்.

(8) குழந்தைகளுக்கு ஆரம்ப பிள்ளைப்பருவத்தை மகிழ்ச்சியாகவும் மற்றும் வினோதமாகவும் களிப்பதற்கு ஏற்ற சுற்றுச்சூழலை உருவாக்கிக்கொடுத்தல்.

(9) பிரதேச மக்களின் கலை, சமய மற்றும் கலாசார தேவைகளுக்கு மதிப்பு அளித்து குழந்தைகளின் நல்வாழ்விற்கு தேவையான அடித்தளம் அமைத்துக்கொடுத்தல்.

(10) ''மாகாண முன்பள்ளி அபிவிருத்தி நிதியம்'' என்ற பெயரில் மாகாண நிதியமொன்றை உருவாக்குதல்.

*பகுதி II*

**நிர்வாகம் மேற்பார்வை மற்றும் செயற்பாடுகள்**

முன்பள்ளி பிரிவு உருவாக்குதல்.

3. இங்கு இதன் பின்பு "மேல் மாகாண முள்பள்ளி பிரிவு" என்று குறிப்பிடப்படும் முன்பள்ளி பிரிவொன்று இங்கு அமைக்கப்படுவதோடு அந்தப் பிரிவு மாகாண கல்வி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெற வேண்டும்.

முன்பள்ளி பணிப்பாளர் நியமனம்.

4. (1) முன்பள்ளி பிரிவுத் தலைவராக பணிப்பாளர் ஒருவர் இருக்க வேண்டும்.

(2) அந்தப் பணிப்பாளர் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் I இல் உள்ள அதிகாரியொருவராக இருக்க வேண்டியதுடன், அவர் செயலாளர் மூலம் நியமிக்கப்படல் வேண்டும்.

(3) முன்பள்ளி பிரிவு எல்லா நடவடிக்கைகளும் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் இயக்குதல் பணிப்பாளர் மூலம் செயற்படுத்த வேண்டும்.

(4) இந்த நியதிச் சட்டத்தின்கீழ் இருக்கும் சுய அதிகாரம், பணி அல்லது தொழிற்பாட்டிற்கு இடையில் ஏதும் பணிப்பாளர் மூலம் யாதொரு அதிகாரிக்கும் பொறுப்பு ஒப்படைக்க முடியும்.

முன்பள்ளி பிரிவின் கடமைகள்.

5. முன்பள்ளி பிரிவு பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

1. மாகாணத்தில் முன்பள்ளி பெயரில் அல்லது வேறு எந்தவொரு பெயரும் அறிமுகப்படுத்தப்படுகின்ற வயது 3- 5 க்கு இடைப்பட்ட குழந்தைகள் தொடர்பாக குறிப்பிட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற, நிறுவனங்களை பதிவு செய்தல், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைமைப்படுத்தல்.

2. மாகாணத்தின் முன்பள்ளி கல்வி நடவடிக்கையை மேம்படுத்துவது தொடர்பாக தேவையான வழிகாட்டல் உட்பட உதவி பெற்றுக்கொடுத்தல்.

3. முன்பள்ளி வயதில் இருக்கின்ற விசேட கல்வி தேவைப்பாடு உள்ள குழந்தைகள் தொடர்பாக தேவையான வசதிகள் மற்றும் சேவை வழங்குதல்.

4. முன்பள்ளி ஆசிரியைகளுக்கு பயிற்சி அளிப்பது தொடர்பாக பயிற்சி நிறுவனங்களை நடாத்திச் செல்லுதல் மற்றும் முறையான பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல்.

5. முன்பள்ளி கல்வி நவீனமயப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பாக சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கு மற்றும் பயிற்சிப்பட்டறை நடாத்துதல்.

6. மாகாணத்தின் முன்பள்ளி தொடர்பான நியமம் மற்றும் சேவை வசதிகளை கருத்திற்கொண்டு தரப்படுத்துதல்.

7. மாகாணத்தினுள் அரசாங்க, உள்ளூராட்சி நிறுவனம் மற்றும் பல அமைப்புகள் மூலம் தனிப்பட்ட மட்டத்தில் செயற்படுத்திக் கொண்டு செல்கின்ற எல்லா முன்பள்ளி தொடர்பாக நிர்வாக மற்றும் முகாமைத்துவ நியமம் குறித்தொதுக்குதல்.

8. மாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தேசிய மட்டத்தில் அரச சார்பற்ற எல்லா பயிற்சி நிறுவனங்களின் நியமம் இருக்கும்படி நடாத்திச் செல்வற்கு வழிகாட்டுதல் மற்றும் ஒழுங்குமுறைமைப்படுத்தல்.

9. முன்பள்ளி கல்வியில் முக்கியத்துவம் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவூட்டல் செய்தல் நிகழ்ச்சித் திட்டத்தை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

பகுதி III

**முன்பள்ளி ஆலோசனைக்குழு**

6. கீழே குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களின் உள்ளடக்கத்துடன் இங்கு இதன்பிறகு "ஆலோசணைக் குழு" என்று அறிமுகப்படுத்தப்படும் முன்பள்ளி ஆலோசனைக் குழுவொன்று அமைச்சர் மூலம் நியமிக்கப்படல் வேண்டும். முன்பள்ளி ஆலோசனைக் குழு.

(1) முன்பள்ளி ஆலோசனைக்குழு இங்கு இதன்பிறகு பதவி அதிகாரத்தில் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்களாக அறிமுகப்படுத்தப்படும். பதவி அதிகாரத்தில் நியமிக்கப் படுகின்ற உறுப் பினர்கள்.

(அ) மேல் மாகாணத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது செயலாளர் மூலம் பெயர் குறிப்பிடப்படுகின்ற நிறைவேற்று தரத்திலுள்ள அதிகாரியொருவர் ;

(ஆ) மேல் மாகாணத்தில் கல்விப் பணிப்பாளர் அல்லது அவருடைய பிரதிநிதி ஒருவர் ;

(இ) மேல் மாகாணத்தில் சுகாதார சேவைப் பணிப்பாளர் அல்லது அவருடைய பிரதிநிதி ;

(ஈ) மேல் மாகாணத்தில் நன்னடத்தையும் சிறுவர் பராமரிப்பு சேவை ஆணையாளர் அல்லது அவருடைய பிரதிநிதியொருவர் ;

(உ) மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவருடைய பிரதிநிதியொருவர்;

(ஊ) குறிப்பிட்ட விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் சட்ட அதிகாரி.

ஆகிய நபர்கள் உட்பட

(2) பத்து வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் பெற்ற மேல் மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் மூன்றுபேர் உட்பட அமைச்சர் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட விடயப்பரப்பு தொடர்பான தகுதியுள்ள ஐந்து பேர் ஆகிய நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.

7. 1 ஆலோசணைக்குழுவின் தலைவர், மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் அல்லது அவருடைய பிரதிநிதியாக இருப்பதோடு முன்பள்ளி பணிப்பாளர் இந்த குழுவில் செயலாளராக இருக்க வேண்டும். முன்பள்ளி ஆலோசனைக் குழுவின் தலைவரும் செயலாளரும்.

2. நியமிக்கப்பட்ட உறுப்பினர் இறந்த பின்பு கேட்டு விலகியோ அல்லது பதவியிலிருந்து நீக்கியதன் பின்பு முன்பள்ளி பதவி கைவிட்டாலொழிய மூன்று வருட காலத்திற்கு பதவியை வகிக்க வேண்டும்.

3. ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் மொத்த எண்ணிக்கை உறுப்பினர்களில் ஐந்து பேர் ஆக இருக்க வேண்டும்.

4. ஆலோசனைக்குழு திருப்திப்படாத காரணமொன்றிற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர் அறிவிக்காமல் கூட்டத் தவணை மூன்றிற்கு தொடர்ந்து சமுகமளிக்காவிட்டால் அந்த உறுப்பினர் பதவியை விட்டு விலகியவராக கருத்தில் கொள்ள வேண்டும்.

5. அமைச்சர் மூலம் எந்த நேரத்திலும் காரணம் காட்டி ஆலோசனைக்குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து நீக்க முடியும்.

6. நியமிக்கப்பட்ட உறுப்பினர் மூலம் தான் பதவியிலிருந்து கேட்டு விலகுவதாக அமைச்சுக்கு அனுப்பிய கடிதத்தின் மூலம் தனது பதவியிலிருந்து கேட்டு விலக முடியும்.

7. நியமிக்கப்பட்ட உறுப்பினர் இறந்த பின்பு கேட்டு விலகியதன் பின்பு பதவியிலிருந்து நீக்கப்பட்டதன் பின் அல்லது வேறு காரணத்திற்காக பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அமைச்சர் மூலம் 6 (2) உப பந்தி ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு அந்த அங்கத்தவரின் பிரதிநிதியாக பதிலாக பிறிதொருவர் நியமிக்கப்படல் வேண்டும். அந்த உறுப்பினருக்குப் பதிலாக நியமிக்கப்படும் எந்தவொரு பதிலான நபர் மூலம் தங்களுடைய பதவிக்காலத்தை மீறாமல் உள்ள காலத்திற்கு பதவியை வகிக்க வேண்டும்.

8. மேற்கூறப்பட்ட (5) உப பந்தியின் கீழ் பதவியிலிருந்து நீக்கப்பட்ட அங்கத்தவரைத் தவிர்ந்த நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவர் மீண்டும் நியமிக்கப்படுதல் தொடர்பாக தகமையுடையவராவர்.

9. ஆலோசனைக்குழு குறைந்தபட்சம் மூன்று மாதத்துக்கு ஒருமுறை கூட்டப்படல் வேண்டும்.

10. நிதி விடயத்திற்கு பொறுப்பான மாகாண சபை அமைச்சரின் இசைவுடன் அமைச்சர் மூலம் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவு எல்லா ஆலோசனை குழுக் கூட்டத்தொடர் தொடர்பாக அதற்கு சமுகமளிக்கின்ற அங்கத்தவர்களுக்கு வழங்க முடியும்.

ஆலோசனைக் குழுவிற்கு நியமனம் பெறுவதற்கு தகைமையீனம்.

8. எந்தவொரு நபரும் -

1. இலங்கை பிரஜையாக இல்லாவிட்டால் அல்லது குடியுரிமை இல்லாது போனால்.

2. சுய உணர்வு அற்றவர் அல்லது சித்த சுவாதீனமற்றவராக இருத்தல்.

3. சொத்து வங்குரொத்து நிலைக்கு உட்பட்டால்.

4. இலங்கையில் அல்லது வேறு நாட்டில் தண்டனையானது நீதிமன்றத்தினூடாக வழங்கப்பட்ட தீர்ப்பிப்படி சிறையில் அடைக்கப்பட்டு தண்டனை தீர்மானிக்கப்பட்டிருந்தால் அல்லது பெற்றுக்கொண்டிருந்தால் அல்லது பெற்றிருந்தால்.

5. ஆலோசனைக்குழுவின் பணிகளையும் தொழிற்பாடுகளையும் செயற்படுத்தும்போது தீங்கு ஏற்படும் வகையில் அழுத்தம் கொடுப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தக்கூடிய நிதி தொடர்பான பதவி வகித்தல்.

6. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குற்றத்திற்கு குற்றவாழியாக உட்பட்ட ஒருவர்.

ஆலோசனைக்குழுவில் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது நடவடிக்கையை செய்து கொண்டு செல்வதற்கு தகைமையற்றவராவார்.

9. ஆலோசனைக்குழுவின் வெற்றிடம் அல்லது அங்கத்தவர்கள் நியமித்தல் தொடர்பான குறைபாடு காரணமாக அதன் மூலம் எடுக்கப்படும் தீர்மானம் அல்லது எடுக்கப்படுகின்ற செயற்பாடு செல்லுபடி அற்றதாக இருக்கக்கூடாது.

ஆலோசனைக் குழுவின் பணிகளும் தொழிற்பாடுகளும்.

10. ஆலோசனைக்குழுவின் மூலம் பின்வரும் பணிகள் மற்றும் தொழிற்பாடு நிறைவேற்றப்படல் வேண்டும்.

(1) மாகாணத்தில் முன்பள்ளி பதிவு செய்தல், ஒழுங்கு முறைமை செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக கொள்கை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குதல்.

(2) முன்பள்ளி பிரிவிற்கு தேவையான ஆலோசனை பெற்றுக்கொடுத்தல் மற்றும் வழிகாட்டல்.

(3) இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக தேவையான சந்தர்ப்பத்தில் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குதல்.

(4) சகல முன்பள்ளி தொடர்பாக உபயோகப்படுத்தப்படும் பாடத்திட்டம் தேசிய கல்வி நிறுவனத்தின் வழிகாட்டலுக்கு அமைய தயாரிப்பதற்கும் சகல முன்பள்ளி பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குதல்.

பகுதி IV

**முன்பள்ளி அபிவிருத்தி நிதியம்**

11. மேல் மாகாணத்தில் முன்பள்ளி அபிவிருத்தி நிதியம் என்ற நிதியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். முன்பள்ளி அபிவிருத்தி நிதியம்.

(1) நிதியத்தின் நிர்வாக நடவடிக்கை தொடர்பாக நிர்வாக சபையொன்று நியமிக்கப்படுவதோடு அது கீழ்குறிப்பிடப்படும் அதிகாரிகளை கொண்டதாக அடங்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

(அ) செயலாளர் மூலம் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அதிகாரியொருவர் ;

(ஆ) பிரதம செயலாளர் அலுவலகத்தில் பணிப்பாளர் (கணக்கு மற்றும் கொடுப்பனவு) ;

(இ) மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) ;

(ஈ) ஆரம்பக்கல்வி விடயத்துக்குப் பொறுப்பான மாகாண இணைப்புப் பணிப்பாளர் ;

(உ) மாகாண கல்வித் திணைக்களத்தில் பிரதான கணக்காளர்.

(2) செயலாளர் மூலம் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அதிகாரியொருவர் இந்த நிர்வாக சபையில் தலைவராக இருக்க வேண்டும்.

(3) மாகாண சபை மூலம் இடைக்கிடையே பெற்றுக்கொடுக்கின்ற எல்லா நிதி மற்றும் முன்பள்ளி பிரிவு மூலம் உழைக்கப்படுகின்ற எல்லா நிதியும் வேறு உதவி மற்றும் வெகுமதிகளும் இந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(4) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கம் நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக ஏற்படும் செலவு இந்த நிதியத்திலிருந்து செலுத்த முடியும்.

(5) நிதியத்தின் கணக்கை கணக்காய்வு செய்வது தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆவது சரத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்க வேண்டும். கணக்கு கணக்காய்வு.

பகுதி V

**முன்பள்ளி தொடர்பான நியமம்**

12. (1) முன்பள்ளிகள் குறைந்தளவில் கீழ் குறிப்பிட்ட அடிப்படை மற்றும் ஆகக்குறைந்த வசதிகள் உள்ளடக்கப்பட்டதாக இருக்க வேண்டும். முன்பள்ளிகளில் இருக்க வேண்டிய அடிப்படை மற்றும் ஆகக் குறைந்த வசதிகள்.

(அ) ஒரு குழந்தைக்காக குறைந்தளவு பத்து சதுர அடி கட்டட வசதி ஒதுக்கியிருத்தல் ;

(ஆ) 25 பிள்ளைகளுக்கு ஒரு மலசலகூடப்படி மலசலகூட முறைமையொன்று உருவாக்கியிருத்தல் ;

(இ) கட்டடத்தின் அறை சதுர அளவில் 1/7 வரும்படி காற்றோட்டம் வழங்குதல் முறைக்கு ஏற்றவிதத்தில் ஒழுங்கமைத்திருத்தல்;

(ஈ) பாதுகாப்பு மதிலாலோ அல்லது பாதுகாப்பு வேலியினாலோ முன்பள்ளிக் காணி மிகவும் பாதுகாப்பாக வைத்திருத்தல் ;

(உ) தேவையான உபகரணம் மற்றும் மருந்து உட்பட முதலுதவிப் பெட்டி ஒன்று நடைமுறைப்படுத்திச் செல்லல் ;

(ஊ) விளையாடுதல் தொடர்பாக வசதிகள் இருத்தல் ;

(எ) முன்பள்ளிக்காணி கவர்ச்சிகரமான சுற்றாடலாக ஒழுங்கமைப்பட்டு இருத்தல் மற்றும் அடிப்படை விளையாட்டு உபகரணங்களை உள்ளடக்கியதாக இருத்தல் ;

(ஏ) பிள்ளைகள் தொடர்பாக 20:1 வீதத்திற்கு பதிவு செய்யப்பட்ட ஆசிரியைகள் ஈடுபடுத்தப்பட்டிருத்தல் ;

(ஐ) போதியளவு தளபாட உபகரணம் இருப்பதுடன், அவை பிள்ளைகளின் மனநிலை மகிழ்ச்சிக்கு ஏதுவான முறைக்கு அழகான தோற்றத்துடன் நடாத்திச் செல்லுதல் ;

(ஒ) சமயக்கிரியை செய்வதற்கு தகுதியான இடம் ஒன்றை உருவாக்கி இருத்தல்.

(2) தீங்கு அல்லது அபாயமுள்ள சுற்றாடலின் உள்ளே அல்லது அந்த இடத்திலிருந்து 100 மீற்றருக்கு உட்பட்ட பிரதேசத்தினுள் முன்பள்ளி நிர்மாணிக்கக்கூடாது.

பகுதி VI

**முன்பள்ளிகள் பதிவு செய்தல்**

பதிவு செய்யப்பட வேண்டும்.

13. இந்த நியதிச் சட்டம் நடைமுறைப்படுகின்ற திகதியிலிருந்து மாகாணத்தினுள் பதியப்படாத முன்பள்ளியொன்றை நடாத்திச் செல்லுதல் கூடாது.

பதிவு தொடர்பாக விண்ணப்பிக்க வேண்டும்.

14. (1) 2003 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முன்பள்ளி நியதிச் சட்டத்தின் கீழ் தற்போதும் பதிவு செய்யப்பட்டிருக்கும் முன்பள்ளியொன்று திரும்பப் பதிவு செய்தல் தேவையற்றதோடு பதிவு செய்யப்படாத முன்பள்ளியொன்று இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் தொடர்பாக நான்கு மாதகால அவகாசம் பெற்றுக்கொடுக்கப்படும்.

(2) இந்த நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்தும் போது புதிதாக ஆரம்பிக்கப்படுகின்ற முன்பள்ளியொன்றை நிறுவி நான்கு மாதங்களுக்குள் பதிவு செய்தல் வேண்டும்.

15. மேலே 14 (1) உப பந்தியின் கீழ் பதிவு செய்வதற்கு முடியாமல்போன ஏதாவது முன்பள்ளியொன்று ஆறு மாத்திற்குள் சட்டத்திற்கு அமைய மற்றும் நியாயமான காரணத்திற்கு அமைவாக பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தால் சென்ற காலத்திற்கு மேலதிக பதிவு செய்வதற்கான கட்டணத்துக்கு மேலதிகமாக 50% க்கு தண்டப்பணம் உட்பட பதிவு செய்வதற்கு பணிப்பாளருக்கு அதிகாரம் உள்ளது.

16. பதிவு செய்வதற்காக விண்ணப்பதாரி மூலம் குறிப்பிட்ட பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

17. இந்த நியதிச்சட்டத்தில் விதிகளை மீறி முன்பள்ளியொன்றை ஆரம்பிக்கின்ற அல்லது முன்பள்ளி நடாத்திக் கொண்டு செல்லுகின்ற நபரொருவர் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குற்றத்திற்கு குற்றவாளியாவார்.

பதிவை நிராகரிப்பதற்கு பணிப்பாளருக்கு உள்ள அதிகாரம்.

18. இந்த நியதிச் சட்டம் செயற்படுகின்ற திகதி ஆகும்போது முன்பள்ளிப் பெயரில் அல்லது வேறு பெயரில் நடாத்திச் செல்கின்ற எந்தவொரு நிறுவனம் நியதிச்சட்டத்தின் விதிகளுக்கு அமைய பதிவு செய்வது தொடர்பாக உரிமை மூலம் பணிப்பாளரிடத்தில் எழுத்துமூலம் கேட்கும்போது அந்த வேண்டுகோள் இந்த நியதிச் சட்டத்தின் விதிகளுக்கு அமையாவிட்டால் பணிப்பாளர் மூலம் அது தொடர்பாக காரணம் காட்டி பதிவு செய்தலை நிராகரிக்க முடியும்.

(1) அவ்வாறான வேண்டுகோள் கேட்கும் எல்லாச் சந்தர்ப்பத்திலும் அது நிராகரிக்கப்பட்டதற்கு காரணம் கேட்கும் திகதியிலிருந்து பஞ்சாங்க ஒரு மாத காலத்திற்குள் அந்த வேண்டுகோள் விடுக்கும் உரிமையாளருக்கு அறிவிக்க வேண்டும்.

(2) அவ்வாறான நிராகரிப்பு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த உரிமையாளர் மூலம் அது தொடர்பான பஞ்சாங்க ஒரு மாத காலத்தினுள் விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரிடத்தில் மேன்முறையீடு செய்ய முடியும்.

(3) அவ்வாறான மேன்முறையீடு ஒன்று கிடைத்த போது அமைச்சர் அதை ஆலோசனை குழுவுக்கு சமர்ப்பித்து ஆராய்ந்து மற்றும் சிபாரிசும் பெற்றுக்கொண்டு பஞ்சாங்க மூன்று மாத காலத்துக்குள் தனது முடிவை மேன்முறையீட்டாளருக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

(4) இது தொடர்பாக அமைச்சர் மூலம் எடுக்கப்படுகின்ற தீர்வு கடைசியானதும் இறுதியானதுமாகும்.

பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆவணம் ஒன்றை நடாத்திச் செல்லல் வேண்டும்.

19. (1) இந்த நியதிச்சட்டம் நடைமுறைப்படுகின்ற திகதி வரும்போது முன்பள்ளியென்று நடாத்திச் சென்று இந்த நியதிச் சட்டம் செயற்படுத்துகின்ற திகதிக்குப் பிறகு நியதிச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய பதிவு செய்யப்பட்டாலும்கூட நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தும் திகதியின் பின்பு நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக புதிதாக நிறுவி பதிவு செய்யப்பட்டிருப்பினும் முன்பள்ளி தொடர்பான ஆவணமொன்று முன்பள்ளிப் பணிப்பாளர் மூலம் நடாத்திச் செல்ல வேண்டும்.

(2) பதிவு செய்யப்பட்ட எல்ல முன்பள்ளிகளுக்கும் பணிப்பாளர் மூலம் இலக்கம் மற்றும் சான்றிதழ் ஒன்றும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

(3) பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஒன்று நியதிச் சட்டத்தின் விதிகளுக்கு அமைய நடாத்திச் செல்லாவிட்டால் அவ்வாறான முன்பள்ளியின் பதிவை இரத்துச் செய்வதற்கு பணிப்பாளருக்கு அதிகாரம் உள்ளது.

முன்பள்ளிப் பதிவை இரத்துச் செய்தல்.

(4) பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி நிர்வாகி முன்பள்ளி தொடர்பான நடவடிக்கையில் நீதிமன்றத்தால் தரப்பட்ட தீர்ப்புக்கு அமைய குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டிருந்தால் அவ்வாறான முன்பள்ளி பதிவு இரத்துச் செய்வதற்கு பணிப்பாளருக்கு அதிகாரம் உள்ளது.

பகுதி VII

**முன்பள்ளி ஆசிரியர்களை பதிவு செய்தல்**

20. (1) "2003 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முன்பள்ளி நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு இருந்து சேவை செய்து இருக்கின்ற தற்போது பதிவு செய்திருக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களை தவிர்ந்த, இந்த நிதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட திகதியாகும்போது முன்பள்ளி ஆசிரியைகளாக செயற்படுகின்றவர்கள் மற்றும் முன்பள்ளி ஆசிரியைகளாக செயற்படுவதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றவர்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படுகின்ற க. பொ. த. (சா.த.) பரீட்சையில் தாய்மொழியில் திறமை சித்தி உட்பட கணிதம் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் ஆலோசனைக்குழு ஏற்றுக்கொண்ட நிறுவனத்தின் டிப்ளோமா ஒன்று பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தாய்மொழிக்கு திறமைச் சித்தி உட்பட கணிதம் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைந்து க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருந்தால் ஆலோசனைக்குழு ஏற்றுக்கொண்ட முன்பள்ளி கல்வி தொடர்பான பயிற்சி பாடநெறி பயின்றிருத்தல் வேண்டும். *முன்பள்ளி ஆசிரியைகளின் கல்வித் தகைமைகள்.*

எவ்வாறாயினும், இந்த நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திகதியாகும்போது 10 வருடங்களுக்கு மேல் கூடுதலான சேவைக் காலம் உட்பட சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மேல், அடிப்படை தகைமை பூரணப்படுத்தாமல் இருக்கின்ற தற்போது பதிவு செய்யாமல் உள்ள முன்பள்ளி ஆசிரியைகள் ஆலோசனைக்குழு மூலம் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்."

21. (1) பதிவு தொடர்பாக விண்ணப்பிக்கின்றவர்கள் நியதிச் சட்ட விதிகளுக்கு அமைவாக தகுதி பெற்றிருந்தால் பதிவு செய்யப்படுவதோடு அடையாள அட்டை ஒன்றையும் வழங்க வேண்டும். *முன்பள்ளி ஆசிரியைகள் பதிவு செய்யப்படுதல்.*

(2) முன்பள்ளி ஆசிரியராக பதிவு செய்யப்பட்டு இருக்கும் நபரொருவர் நியதிச்சட்டத்தின் விதிகளுக்கு அமைய தகைமை பெற்றிருக்காவிட்டால் அல்லது நீதிமன்றம் மூலம் தரப்படுகின்ற தீர்ப்பின் தண்டனை குற்றத்தில் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் அந்த முன்பள்ளி ஆசிரியையின் பதிவை இரத்துச் செய்வதற்கு பணிப்பாளருக்கு அதிகாரம் உள்ளது. *முன்பள்ளி ஆசிரியையின் பதிவை இரத்துச் செய்தல்.*

(3) பதிவு செய்வது தொடர்பாக முன்பள்ளி ஆசிரியைகள் மூலம் குறிப்பிட்ட கட்டணம் செலுத்த வேண்டும்.

பகுதி VIII

**குற்றம் மற்றும் தண்டனை**

22. (1) (அ) இந்த நியதிச்சட்ட விதிகளுக்கு அல்லது நியதிச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட விதி அல்லது மீறுதல், உடைப்பு செய்கின்ற எந்தவொரு நபர் ;

(ஆ) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் கடமை செய்கின்ற அதிகாரியின் கடமைக்கு இடைஞ்சல் ஏற்படுத்தல், இடையூறு ஏற்படுத்தும் எந்தவொரு நபரும் ;

(இ) மேல் (அ) , (ஆ) பந்தியில் கூறப்பட்ட பிழை தொடர்பாக ஊக்கமளித்தல், உதவி அளித்தல் ஏற்படுத்துகின்ற நபரொருவர்.

இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றத்துக்கு குற்றவாளியாவார்.

(2) மேல் (1) உப பந்திக்கு அமைய எந்தவொரு குற்றவாளி ஆகின்ற நபரொருவர் நீதிவான் முன்னிலையில் நடைபெறுகின்ற சுருக்க வழங்கு விசாரணையின் பின்பு குற்றவாளியாக்கப்பட்டால் பத்தாயிரம் (ரூபா 10,000 ) ரூபாவுக்கு குறையாமலும் ஐம்பதாயிரம் (ரூபா 50,000.00 ரூபாவுக்கு மேற்படாமலும் மற்றும் ஆறு மாதத்துக்கு மேற்படாமல் சிறை வைப்பதற்கு மற்றும் அந்த தண்டனை இரண்டுக்கும் மற்றும் கீழ்படிய வேண்டும்.

(3) மேற்படி (2) உப பந்தியில் குறிப்பிடப்பட்ட தண்டனைகளுக்கு மேலதிகமாக இந்த நியதிச் சட்டத்தில் 19 (3), (4) உப பந்தியின் கீழ் பதிவு இரத்துச் செய்யப்பட்ட முன்பள்ளி மூடிவிடுதல் தொடர்பாக நீதிவான் மூலம் கட்டளை பிறப்பிக்க முடியும்.

(4) மேலலே (2) உப பந்தியில் குறிப்பிட்ட தண்டனைகளுக்கு மேலதிகமாக இந்த நியதிச் சட்டத்தில் 14 (1), (2) ஆம் உப பந்தியின் கீழ் பதிவு செய்யப்படாமல் நடாத்திக் கொண்டு வருகின்ற முன்பள்ளியொன்று மூடிவிடுதல் தொடர்பான நீதிவான் மூலம் கட்டளை பிறப்பிக்க முடியும்.

23. (1) இந்த நியதிச் சட்டத்திற்கு மேல் மாகாண ஆளுநரின் அனுமதி கிடைத்த திகதியிலிருந்து மேல் மாகாணத்தின் மாகாண சபையில் 2003 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முன்பள்ளி நியதிச் சட்டம் வலுவிலக்கச் செய்யப்படும்.

(2) எப்படியானாலும் 2003 ஆண்டின் 4 ஆம் இலக்க முன்பள்ளி நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி மற்றும் முன்பள்ளி ஆசிரியைகள் இந்த நியதிச் சட்டத்தின் கீழேயும் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி மற்றும் முன்பள்ளி ஆசிரியைகளாக கணிக்கப்படுவார்கள்.

(3) 2003 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முன்பள்ளி நியதிச்சட்டத்தின் கீழ் செய்யப்படுகின்ற அலுவல்கள் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் செய்யப்படுகின்ற அலுவல்களாக கணிக்கப்படும்.

பகுதி IX

**பொது ஏற்பாடுகள்**

24. (1) இந்த நியதிச் சட்டம் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மேற்படி 02, (3), (4), (6), (10), 05, 11, (3), (4), 12 (1), (2), 16, 19 (2), 21 (3) பந்தி தொடர்பாக விதி உருவாக்குவதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது.

(அ) அந்த எல்லா விதியும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவேண்டியதுடன் அது, பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது விதியில் குறிப்பிட்டது தொடர்பாக எந்தவொரு பிறிதொரு தினத்திலிருந்தும் நடைமுறைப்படுத்த வேண்டும் ;

(ஆ) அது அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்பு மூன்று மாதத்திற்குள் அனுமதி தொடர்பாக மாகாண சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன், மாகாண சபை மூலம் அனுமதிக்கப்படாத எந்தவொரு விதியும் அனுமதி பெறாத திகதியிலிருந்து அந்த விதியின் கீழ் முன்பு செய்யப்பட்ட செயலுக்கு தீங்கு ஏற்படாத வகையில் வலுவிலக்க செய்யப்பட்டதாக கவனத்தில் கொள்ளப்படும்.

(2) இந்த பந்தியின் கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு விதியும் மாகாண சபை மூலம் அனுமதிக்கப்படும்வரை அத்துடன் அந்த அனுமதி அரச வர்த்தமானியில் வெளியிடப்படும் வரை செல்லுபடியற்றதாகும்.

வியாக்கியானம்.

25. சொல் தொடர்பாக வேறுபடுத்துதல் தேவையானால் மட்டுமின்றி இந்த நியதிச் சட்டத்தில் –

"மாகாண சபை" என்பது மேல் மாகாண சபை என்றும்.

"அமைச்சர்" என்பது கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்றும்.

"செயலாளர்" என்பது கல்வி வியடத்திற்கு பொறுப்பான கல்வி அமைச்சின் செயலாளரென்றும்.

"கல்விப் பணிப்பாளர்" என்பது இந்த நியதிச் சட்டத்தின் கீழ் செயற்படுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட அதிகாரியாகும்.

"முன்பள்ளி" என்பது மாகாணத்தினுள் மூன்று வயதிலிருந்து ஐந்து வயதுக்கிடையில் ஆரம்ப பிள்ளைப் பருவத்தின் குழந்தைகளின் அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிட்ட செயற்பாடுகளை உபயோகித்து செய்யப்படுகின்ற எந்தவொரு நிறுவனமும் ஆகும்.

"குறிப்பிட்ட செயற்பாடுகள்" என்பது ஆரம்பப் பிள்ளைப்பருவ குழந்தைகளின் எல்லா அபிவிருத்திக்கு தொடர்பான உடல், உள, மன எழுச்சி, சமூக, மொழி, சுற்றாடல், திறன் மேலும் அழகியற்கலை, இயற்கையாக உள்ள திறமை மற்றும் அன்றாட பழக்கம் ஆகிய பகுதிகளில் அபிவிருத்திக்கு உகந்த நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

"ஆலோசனைக்குழு" என்பது முன்பள்ளி ஆலோசனைக்குழு என்றும்.

"முயற்சியாளர் என்பது" முன்பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்திக் கொண்டு வருகின்ற எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ.

"முன்பள்ளி ஆசிரியை" என்பது முன்பள்ளி ஆசிரியை என்று நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளவர் என்றும்.

"விசேட கல்வி தேவையாகவுள்ள குழந்தைகள்" என்று முன்பள்ளி வயதில் உள்ள வைத்திய சிபாரிசில் உறுதிப்படுத்தப்பட்ட உடல் மற்றும் அல்லது உளரீதியான குறைபாடுகளுடன் உள்ள குழந்தைகள் என்றும்.

"நபரொருவர்" என்பது முன்பள்ளியொன்றை நடாத்திச்கொண்டு செல்லும் நபரொருவரோ அல்லது முயற்சியாளரோ அல்லது தொண்டர் அமைப்போ அல்லது அமைப்பு ரீதியான நிறுவனமோ அல்லது முன்பள்ளியில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஆசிரியையோ அல்லது பணிக்குழுவின் எந்தவொரு ஊழியரும் அல்லது வெளியொருவர் அல்லது நபரொருவரென்றும்.

"அடிப்படை விளையாட்டு உபகரணம்" என்பது ஏறுதல், தொங்குதல், துள்ளுதல், ஆடுதல், வழுக்குதல், நுழைதல் மற்றும் எறிதல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பாக உபயோகப்படுத்தப்படுகின்ற உபகரணம் என்றும்.

"தீங்கு அல்லது அபாயமுள்ள இடம்" என்பது முன்பள்ளி ஒன்று அமைந்துள்ள இடத்திலிருந்து மிகவும் அருகில் மதுபானசாலை அல்லது விற்பனை நிலையம், திரையரங்கு, வீடியோ காட்சியறை, மலர்ச்சாலை, இறைச்சி, மீன் விற்பனை நிலையம், பாதுகாப்பற்ற தொழிற்சாலை, கழிவுப்பொருட்கள் சேர்க்கும், அதிக சத்தம் அல்லது வளி மாசடையும் இடம், விசமுள்ள மிருகங்கள் நடமாடும் இடம், திறந்த நிலையில் இருக்கும் கிணறு, நீர்த்தடாகம், கால்வாய், கங்கை அல்லது குளம் அல்லது அபாயமுள்ள பள்ளத்தாக்கு அமைந்துள்ள இடம் என்றும்.

கருதப்படும்.

26. இந்த நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் சொற்களுக்கு இடையில் எந்தவொரு முன்னுக்குப்பின் முரணான கருத்து ஏற்படும் பட்சத்தில் அதில் சிங்களமொழிச் சொல் வலுப்பெறும். *முன்னுக்குப்பின் முரணான கருத்து ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிச் சொல் வலுப் பெறும்.*

9- 605

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

3 - PG 1747